# நாராயண குரு நல்லிணக்க நிகழ்ச்சி இலச்சினை வெளியீடு



முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் நேற்று, சிவகிரி மடம் மற்றும் சிவகிரி ஆசிரமம் சார்பில் இங்கிலாந்தில் மே 2 முதல் 4 வரை நடைபெற உள்ள 'ஸ்ரீ நாராயண குரு நல்லிணக்கம்' நிகழ்ச்சிக்கான இலச்சினையை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியின்போது, சிவகிரி மடத்தின் சர்வதேச அமைப்புச் செயலாளர் சுவாமி வீரேஸ்வரானந்தா, இங்கிலாந்து நாட்டின் சிவகிரி ஆசிரமத்தின் தலைவர் பைஜு பாலக்கல், செயலாளர் மற்றும ஒருங்கிணைப்பாளர் சதீஷ் குமார், ஒருங்கிணைப்பாளர் கணேசன் சிவன், இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ ஆகியோர் உடனிருந்தனர்.

## ஓமந்தூரார் பிறந்தநாள் முதல்வர் புகழஞ்சலி

**சென்னை, பிப். 2:** சென்னை மாகாணத்தின் முதல் முதலமைச்சரான ஓமந்தூரார் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு:

தலைசிறந்த காந்தியவாதியும் விடுதலை பெற்ற இந்தியாவில் சென்னை மாகாணத்தின் முதல் முதலமைச்சருமான ஓமந்தூரார் பிறந்தநாள் இன்று. ஆலய பிரவேசச் சட்டம், ஆதி திராவிடர் நலனுக்கென தனித்துறை, ஜமீன்தார் ஒழிப்பு சட்டம், இனாம் ஒழிப்பு சட்டம், தேவதாசி முறை ஒழிப்பு சட்டம், இந்து சமய அறநிலைய சட்டம் என குறுகிய காலத்தில் அவர் படைத்த சாதனைகள் ஏராளம். பொதுவாழ்வில் நேர்மை, உழவர்கள் மீது பெரும் அக்கறை என வாழ்ந்த அவருக்கு என் புகழஞ்சலிகள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### அனைத்து ஆய்வு அறிக்கைகளிலும் தமிழ்நாட்டுக்கு பாராட்டு பத்திரம் வாசிக்கப்படுகிறது

# நிதிநிலை அறிக்கையில் மட்டும் தமிழ்நாடு முழுமையாக புறக்கணிக்கப்படுவது ஏன்?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி

**சென்னை, பிப். 2:** அனைத்து ஆய்வு அறிக்கைகளிலும் பக்கத்துக்கு பக்கம் தமிழ்நாட்டின் செயல்பாடுகளுக்கு பாராட்டு பத்திரம் வாசிக்கப்படுகிறது. ஆனால், நிதிநிலை அறிக்கையில் மட்டும் இந்த ஆண்டும் தமிழ்நாடு முழுமையாக புறக்கணிக்கப்படுவது ஏன் என முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒன்றிய அரசின் பட்ஜெட் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைதள பதிவில் வெளியிட்டுள்ள அறிக்கை:

ஒன்றிய நிதிநிலை அறிக்கை என்றாலே தமிழ்நாட்டை பொறுத்தவரை ஓரவஞ்சனைதானா? தமிழ்நாடு என்ற பெயர்கூட தொடர்ந்து இடம்பெறுவதில்லையே? எத்தனையோ கோரிக்கைகளை முன்வைத்தோமே, அதில் ஒன்றைக்கூடவா உறுதிசெய்து அறிக்கையில் சேர்க்க மனம் வரவில்லை? நெடுஞ்சாலைகள் - ரயில்வே திட்டங்கள் - கோவை, மதுரை மெட்ரோ ரயில் எதையுமே கொடுக்காதது ஏன், எது தடுக்கிறது?

> எந்த மாநிலத்தில் தேர்தல் நடைபெற உள்ளதோ, எங்கு பாஜ கூட்டணி ஆட்சியில் உள்ளதோ அந்த மாநிலத்துக்கு மட்டும்தான் திட்டங்களும் நிதியும் அறிவிக்கப்படும் என்றால் 'ஒன்றிய' நிதிநிலை அறிக்கை என இதனை அழைக்க வேண்டிய அவசியம் என்ன?

பொருளாதார ஆய்வறிக்கை, உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசை அறிக்கை, நிதி ஆயோக் அறிக்கை என ஒன்றிய அரசின் அனைத்து அறிக்கைகளிலும் முதன்மையான இடத்தை பிடிக்கிறது தமிழ்நாடு. பக்கத்துக்கு பக்கம் தமிழ்நாட்டின் செயல்பாடுகளுக்கு பாராட்டு பத்திரம் வாசிக்கப்படுகிறது. ஆனால், நிதிநிலை அறிக்கையில் மட்டும் இந்த ஆண்டும் தமிழ்நாடு முழுமையாக புறக்கணிக்கப்படுவது ஏன்? தமிழ்நாடு ஏற்காத கொள்கைகளையும் மொழியையும் திணிப்பதில் காட்டும் ஆர்வத்தில் சிறு துளியையாவது நிதி ஒதுக்கீட்டில் காட்ட வேண்டாமா?

ஒன்றிய அரசானது தன்னுடைய திட்டங்களில் தன்னுடைய பங்குத் தொகையை குறைத்து கொண்டே வருவதால், மாநில அரசின் நிதிச்சுமை அதிகரித்துக் கொண்டே வருகிறது. பல்வேறு திட்டங்களில் மிகவும் குறைவாக மானியத்தொகையை வழங்கும் ஒன்றிய அரசு, அதிலும் பல்வேறு கட்டுப்பாடுகளை தமிழ்நாட்டிற்கு மட்டும் விதித்துள்ளது. விளம்பர மோகம் கொண்ட ஒன்றிய அரசு, திட்ட விளம்பரங்களில் ஒன்றிய அரசின் முத்திரை இடம் பெறாவிட்டால், திட்டம் சரியாகவும் செம்மையாகவும் செயல்படுத்தப்பட்டிருப்பினும், நமக்கு சேரவேண்டிய திட்ட நிதியை விடுவிப்பதில்லை. விளம்பரம் ஒன்றையே பாராட்டும் ஒன்றிய அரசு, மக்கள் நலனில் எந்தவொரு அக்கறையையும் காட்ட மறுக்கிறது.

வெற்றுச் சொல் அலங்காரங்களும், வஞ்சனையான மேல் பூச்சுகளும் கொண்ட அறிக்கையின் மூலமாக இந்திய நாட்டு மக்களை வழக்கம் போல் ஏமாற்றும் பாஜவின் பம்மாத்து நாடகம் தொடர்கிறது. எந்த மாநிலத்தில் தேர்தல் நடைபெற உள்ளதோ, எங்கு பாஜ கூட்டணி ஆட்சியில் உள்ளதோ அந்த மாநிலத்துக்கு மட்டும்தான் திட்டங்களும் நிதியும் அறிவிக்கப்படும் என்றால் 'ஒன்றிய' நிதிநிலை அறிக்கை என இதனை அழைக்க வேண்டிய அவசியம் என்ன?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஸ்லாஸ் தேர்வை முறையாக நடத்தி முடிக்க வேண்டும்

## பள்ளிக்கல்வித்துறை அறிவுறுத்தல்

**சென்னை, பிப்.2:** பள்ளிக் கல்வித் துறை இயக்குநரகம் சார்பில், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் திறனை அளவிடுவதற்காக அவ்வப்போது ஸ்லாஸ் எனும் மாநில கற்றல் அடைவுத்தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி நடப்பாண்டு 3, 5, 8ம் வகுப்பு பயிலும் 15.78 லட்சம் மாணவர்களுக்கு ஸ்லாஸ் தேர்வு பிப்ரவரி 4 முதல் 6ம் தேதி வரை நடத்தப்பட உள்ளது. இந்த தேர்வு கொள்குறி வினாத்தாள் அடிப்படையில் நடைபெறும். மேலும், வினாத்தாளில் 3ம் வகுப்பு 35 கேள்விகள், 5ம் வகுப்புக்கு 45 வினாக்கள், 8ம் வகுப்புக்கு 50 கேள்விகள் இடம்பெறும்.

இந்த தேர்வை நடத்துவதற்கு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து கூடுதல் வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதில், தேர்வுக்கு முதல் நாள் வட்டார வளமையத்தில் இருந்து வினாத்தாள்களை பெற்று பள்ளிகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். ஒவ்வொரு நாளும் மாணவர்கள் தேர்வெழுதி முடித்தபின் வினாத்தாள்கள் மற்றும் ஓஎம்ஆர் தாள்களை பெற்று வட்டார வளமையத்தில் ஒப்படைப்பது அவசியம். தேர்வு எழுதும் மாணவர்களுக்கு தேவையான இருக்கை வசதி, வகுப்பறை காற்றோட்டமாகவும் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். தேர்வு நாளில் மாணவர்கள் புகைப்படம் எடுத்து, குழுவில் பதிவு செய்வது முதலியவற்றை தவிர்க்கவேண்டும். மேலும், எவ்வித முறைகேடுகளுக்கு இடம் தராமல் வழிகாட்டுதல்களின்படி தேர்வை சிறப்பாக அந்தந்த மாவட்ட முதன்மைக்கல்வி அதிகாரிகள் நடத்தி முடிக்க வேண்டும்.

# அலுவலக கட்டிடம் இடமாற்றம்

**சென்னை, பிப். 2:** தொழிலாளர் துணை ஆணையர் (சமரசம்)-2, தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-2, மற்றும் தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-3 அலுவலக கட்டிடம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது சென்னை-600108, குறளகம் 3வது தளத்தில் இயங்கி வரும் தொழிலாளர் துணை ஆணையர் (சமரசம்)-2, தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-2 மற்றும் தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-3, ஆகிய 3 அலுவலகங்களும், "Wavoo Mansion" 48/39, 7வது தளம், இராஜாஜி சாலை, சென்னை-600 001 என்ற முகவரிக்கு 1ம் தேதி(நேற்று) முதல் இடமாற்றம் செய்யப்படுகிறது.

இவ்வலுவலகம் புதிய கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவதால் இனிவரும் காலங்களில் மேற்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தகவலை தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-2 தெரிவித்துள்ளார்.

**தமிழ் நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்**
(தமிழ்நாடு அரசு சார்பு நிறுவனம்)
வடக்கு வட்டம்
எண். 1&7, ஆய்வாளர் குடியிருப்பு பி.ஜி.ஆர்.லைன், மாநகர காவல் அலுவலக பின்புறம், அன்னதானப்பட்டி, லைன்மேடு, சேலம் - 636 006 மின்அஞ்சல் : spndengrnc.tnphcl@tn.gov.in & senctnphcl@gmail.com தொலைபேசி எண். 0427-2903010

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண் : 30/2024-2025 நாள் : 01.02.2025

| வேலையின் பெயர் | வேலையின் தோராய மதிப்பு (இலட்சத்தில்) |
|---|---|
| 1) 2024-2025 ஆண்டிற்கான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி சேலம் மாநகரில் உள்ள லைன்மேட்டில் சுயசேவை கேண்டீன் கட்டுதல் மற்றும் வளர்ச்சி [illegible] (க.பொ வல வதி/157/2025) | ரூ. 79.46 + GST @ 18% |
| 2) 2024-2025 ஆண்டிற்கான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி [illegible] (க.பொ வல வதி/156/2025) | ரூ. 77.52 + GST @ 18% |

1) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in அணுகவும்
2) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கும் காலம் மற்றும் சமர்ப்பிக்கப்படுவதற்கான நாள் மற்றும் நேரம் : 13.02.2025 நண்பகல் 12.00 மணி முதல் 19.02.2025 மாலை 06.00 மணி வரை
3) ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 21.02.2025 காலை 11.15 மணிக்கு
4) விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை www.tnphc.com & www.tnpolice.gov.in ஆகிய இணையதளங்களில் காணலாம்

செமதொஇ/ 426/ஒப்பந்தப்புள்ளி/2025
கண்காணிப்புப் பொறியாளர், வடக்கு வட்டம்

**மத்திய ரயில்வே**

**இ-டெண்டர் அறிவிப்பு எண். NIT/01/25/06 தேதி 30-ஜனவரி-25**

இந்திய குடியரசுத் தலைவர் சார்பில், மத்திய ரயில்வே, முதன்மை தலைமை பொருட்கள் மேலாளர், பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இ-டெண்டர்களை வரவேற்கிறார்:

| வ. எண். | டெண்டர் எண். | விவரம் | அளவு | கெடு தேதி |
|---|---|---|---|---|
| 1 | 18243494A | உட்வார்டு கவர்னருக்கான ஓவர்ஹாலிங் கிட் | 54 nos | 17-FEB-25 |
| 2 | 27253283 | செட் ஆஃப் கான்டாக்ட்ஸ் | 424 sets | 17-FEB-25 |
| 3 | 80252249 | செர்வோபிளக்ஸ் எஸ்எச்சி-120 (ஐஓசிஎல்) கிரீஸ் ஃபார் டிராக்சன் மோட்டார் பேரிங் | 9800 Kg | 17-FEB-25 |
| 4 | 27253231 | பான்டோகிராப் | 64 nos | 20-FEB-25 |
| 5 | 27254665 | பான்டோகிராப்-க்கான பவ் அசெம்பிளி | 63 nos | 20-FEB-25 |
| 6 | 27253007 | பிரேக் கியர் பாகங்களின் தொகுப்பு | 25 sets | 24-FEB-25 |
| 7 | 38241347 | டிஸ்ட்ரிபியூட்டர் வால்வ் கம்ப்ளீட் வித்தவுட் காமன் பைப் பிராக்கெட் அண்டு கன்ட்ரோல் ரிசர்வேயர் ஃபார் ஃப்ரைட் ஸ்டாக் | 458 nos | 24-FEB-25 |
| 8 | 71245101A | எலும்பு முறிவு மருத்துவத் துறைக்கு முதுகெலும்பு அறுவை சிகிச்சைக்கான ரோபோடிக் அமைப்பு கொள்முதல் செய்தல் | 02 nos | 28-FEB-25 |
| 9 | 27253964 | டிஸ்க் பிரேக் ஏற்பாடு | 10 sets | 03-MAR-25 |
| 10 | 50243093A | எலெக்ட்ரிக் பாயிண்ட் மெஷின் | 30 nos | 10-MAR-25 |
| 11 | 51246026 | ஆர்டிஎஸ்ஓ-வுக்கு அகலமான ப்ரீ-ஸ்ட்ரெஸ்டு கான்கிரீட் ஸ்லீப்பர் | 2516690 nos | 20-FEB-25 |

குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து டெண்டர்களும் இ-டெண்டர்கள் மற்றும் அனைத்து டெண்டர்தாரர்களும் தங்கள் ஏலங்களை https://www.ireps.gov.in என்ற ஐஆர்இபிஎஸ் இணையதளம் மூலம் ஆன்லைனில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலே குறிப்பிடப்பட்ட டெண்டர்கள் மற்றும் பிற வழங்கல் டெண்டர்கள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு தயவுசெய்து ஐஆர்இபிஎஸ் இணையதளத்தைப் பார்வையிடவும்.

முதன்மை தலைமை பொருட்கள் மேலாளருக்காக 745

खतरनाक व विस्फोटक सामान के साथ यात्रा करना दंडनीय अपराध है

### பொது இடங்களில் கொடிக்கம்பங்கள் அகற்ற உத்தரவு

# அடிப்படை உரிமையை பறிப்பதாகும்

## முத்தரசன் குற்றச்சாட்டு

**சென்னை, பிப். 2:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை:

அரசியல் கட்சிகள் மற்றும் சங்கங்களின் கொடிக் கம்பங்கள் அனைத்தையும் வரும் ஏப்ரல் 28ம் தேதிக்குள் அகற்ற வேண்டும் என ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது.

ஏற்கனவே, நீதிமன்றத்தின் தீர்ப்பை காட்டி, தமிழ்நாட்டில் சாலைகளில் ஊர்வலம் செல்வதையும், முக்கிய அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம், உண்ணாநிலைப் போராட்டம் நடத்துவது போன்ற ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இப்போது, பொது இடங்களில் கொடிக்கம்பங்கள் இருக்கக் கூடாது என்பதும், அப்படி இருந்தால் அதற்கு கட்டணம் வசூலிக்க வேண்டும் என்பதும், அபராதம் விதிக்க வேண்டும் என்பதும் அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிரானதாகும். இத்தகைய எதிர்மறை கண்ணோட்டம் கொண்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக்கிளை அமர்வின் உத்தரவு மறுபரிசீலனை செய்து, திருத்தப்பட வேண்டிய தீர்ப்பாகும். அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட பொது நல அமைப்புகளின் ஜனநாயக செயல்பாடுகளை உறுதி செய்ய, மதுரைக் கிளை நீதிமன்ற உத்தரவின் மீது மேல்முறையீடு செய்து, சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொண்டு, ஜனநாயக நெறிமுறைகளை பாதுகாக்க வேண்டும் அல்லது தமிழ்நாடு சட்டமன்றத்தில் இது தொடர்பாக சிறப்பு சட்டம் நிறைவேற்றி, அரசியலமைப்பு சட்டம் குடிமக்களுக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் நிலைநாட்ட வேண்டும்.



இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சார்பதிவாளர் அலுவலகங்களில் நாளை கூடுதல் டோக்கன்கள்

## விடுமுறை தினமான இன்றும் அலுவலகங்கள் செயல்படும்

**சென்னை, பிப்.2:** பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் வெளியிட்ட அறிக்கை:

2024-25ம் நிதியாண்டில் கடந்த டிச.5ம் தேதி ஒரே நாளில் இதுவரையில் இல்லாத அளவில் அரசுக்கு ₹238.15 கோடி வருவாய் பதிவுத்துறையில் ஈட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கடந்த ஜன.31ம் தேதி 23,061 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு, இதே நிதியாண்டில் இரண்டாவது முறையாக அரசுக்கு ₹231.51 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒரு நாள் வருவாய் வசூலில் இண்டாவது முறையாக இதே நிதியாண்டில் அதிக வசூல் செய்து புதிய மைல்கல்லை பதிவுத்துறை எட்டியுள்ளது.



மேலும், பொது மக்களின் நலன் கருதி அசையா சொத்து குறித்த ஆவணப்பதிவுகளை மங்களகரமான நாட்களில் மேற்கொள்ள பொதுமக்கள் விரும்புவதால் பொது விடுமுறை நாளான இன்று (பிப்.2ம் தேதி) ஞாயிற்றுக்கிழமை அன்று ஆவணப்பதிவுகள் மேற்கொள்ள அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விடுமுறை நாளில் மேற்கொள்ளப்படும் ஆவணப் பதிவுகளுக்கு விடுமுறை நாள் ஆவணப்பதிவிற்கான கட்டணம் சேர்த்து வசூலிக்க அறிவுறுத்தப் பட்டுள்ளது.

மங்களகரமான நாளான பிப்.3ம் தேதி அன்று கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று மங்களகரமான நாளான பிப்.3ம் தேதி அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப்பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100-க்குபதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுடன் கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப் பட்டுள்ளது.

**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**
சொத்து வசூல் நிர்வாக கிளை
மூன்றாவது தளம், மத்திய அலுவலக வளாகம், 763, அண்ணா சாலை, சென்னை-600 002, Ph: 044-2851 9453 / 2842 0262 Email: iob1535@iob.in

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான அறிவிப்பு**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) / 9(1) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **ஆக்கப்பூர்வமான சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் ஆகியோர்களிடமிருந்து** இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சொத்து வசூல் நிர்வாக கிளைக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகைகளை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் **20.02.2025** அன்று விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

**வ.எண்.1: கடன்தாரர்கள் பெயர்: M/s.Varuna Exports**, பழைய எண்.161, புதிய எண்.80, OOR ரூம் – C – 2, தம்புசெட்டி தெரு, சென்னை – 600001 **2)Mr.M.இளைய பெருமாள்,** எண்.4B, 1வது தெரு, பாலாஜி நகர், கொரட்டூர், சென்னை 600 076 **[கூட்டாளி/ஜாமீன்தாரர்/ அடமானதாரர்]** மற்றும் **3) K.ஆனந்தன்,** எண்..42/21, IAF மெயின் ரோடு, திருவள்ளூர், சென்னை 600 072, **[கூட்டாளி/ஜாமீன்தாரர்/ அடமானதாரர்]** கடன் நிலுவைத்தொகை: 30.01.2025 அன்றுள்ளபடி ₹ **3,94,37,733/-** (ரூபாய் மூன்று கோடியே தொண்ணூற்று நான்கு லட்சத்து முப்பத்து ஏழாயிரத்து எழுநூற்று முப்பத்து மூன்று மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகள்.

| | |
|---|---|
| SARFAESI சட்டம் 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி | 27.04.2022 |
| SARFAESI சட்டம் 13(4)-ன் கீழ் சுவாதீன அறிவிப்பு தேதி | 12.10.2022 |
| கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் கீழ் விதி 8(6)ன் கீழ் விற்பனை அறிவிப்பு | 07.10.2023 |
| கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் கீழ் விதி 9(1)ன் கீழ் இதர விற்பனை அறிவிப்பு | 14.12.2023, 11.01.2024, 22.02.2024, 01.05.2024, 29.05.2024, 09.07.2024, 28.08.2024, 24.10.2024, 27.12.2024 |

**சொத்து விபரம்**

தென் சென்னை பதிவு மாவட்டம், ஆவடி சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.235/8 மற்றும் 235/9, **மனை எண்.10, தனலட்சுமி நகர், விளிஞ்சியம்பாக்கம் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 4576 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்**, அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: காலி நிலம், தெற்கு: 20 அடி ரோடு, கிழக்கு: மனை எண்.9 & 9A, மேற்கு: மனை எண்.12.

**ரிசர்வ் விலை ₹ 2,16,76,000/- EMD ₹ 21,67,600/- ஏல உயர்வுத்தொகை ₹ 3,00,000/-**

**வ.எண்.2: கடன்தாரர்கள் பெயர்: M/s.சூசன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்,** Sucons Padmalaya, ப்ளாட் எண்.20, 5வது தளம், கதவு எண்.5/3, வெங்கட் நாராயணா ரோடு, தி.நகர், சென்னை-600017 அதன்சார்பாக **இயக்குனர்கள்/ ஜாமீன்தாரர்கள்: 1). Shri.V.வெங்கடரங்கன், 2).Smt.V.மஞ்சுளா, 3). Shri.V.சூசன் (Shri.V.Sushen) தையூர் வீட்டு நில திட்டத்தின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள அட்டவனை சொத்தின் உரிமையாளர் திருமதி. ஷீலா சார்லஸ் மோகன், தற்போது வீட்டுத் திட்டத்துக்கான நில உடைமையில் 38% பிரிக்கப்படாத பங்கு உள்ளது** கடன் நிலுவைத்தொகை: 31.01.2025 அன்றுள்ளபடி ₹ **13,30,31,155/-** (ரூபாய் பதிமூன்று கோடியே முப்பது லட்சத்து முப்பத்து ஒன்றாயிரத்து நூற்று ஐம்பத்து ஐந்து மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகள்.

| | |
|---|---|
| SARFAESI சட்டம் 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி | 25.05.2015 |
| SARFAESI சட்டம் 13(4)-ன் கீழ் சுவாதீன அறிவிப்பு தேதி | 28.09.2015 |
| கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் கீழ் விதி 8(6)ன் கீழ் விற்பனை அறிவிப்பு | 04.01.2016 |
| கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் கீழ் விதி 9(1)ன் கீழ் இதர விற்பனை அறிவிப்பு | 06.02.2016, 18.10.2016, 01.06.2018, 22.02.2019, 13.09.2019, 04.10.2019, 30.11.2019, 02.01.2020, 13.02.2020, 07.03.2020, 02.03.2021, 28.04.2021, 15.06.2021, 11.08.2021, 06.09.2021, 11.03.2022, 27.12.2022, 28.03.2023, 15.09.2023, 26.11.2024, 21.12.2024, 10.01.2025 |

**சொத்து விபரம்**

**ஐட்டம் எண்.1:** செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட S.எண்.1401/1C பகுதி, (பட்டா படி S.எண்.1401/1C) மற்றும் 17/1B, அனுமதி பெற்ற சப்டிவிஷன் திட்ட எண்.DTPC 194/2011 - மனை எண்.1-ல் இருந்து 11 வரை மற்றும் கடைகள், எண்.46, தையூர் - B கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம்-ல் என்னும் முகவரியில் பாகம் பிரிக்கப்பட்ட மனை எண்கள்.1-ல் இருந்து 11 வரை மற்றும் கடைகள் மற்றும் மொத்தமுள்ள 18516 சதுர அடியில் 10433 சதுர அடி அல்லது 62% பிரிக்கப்படாத பங்கு நிலம். எல்லைகள்: வடக்கு: S.எண்.17/2, குப்பம்மாள் மதுரைமுத்து நிலம், தெற்கு: வண்டி பாதை ரோடு, கிழக்கு: S.எண்.1401/2, மேற்கு: சர்வே எண்.1401/1C & 20 அடி ரோடு.

| பிளாக் எண் | மனை எண் | ப்ளாட் எண் | கட்டிட பரப்பு (ப்ளாட் அளவு) சதுர அடி | UDS சதுர அடி |
|---|---|---|---|---|
| பிளாக் 2 | 2 | ப்ளாட் B (1வது தளம்) | 1289 | 841 |
| | | ப்ளாட் C (1வது தளம்) | 1254 | 818 |
| | | ப்ளாட் D (2வது தளம்) | 1271 | 829 |
| பிளாக் 3 | 3 | ப்ளாட் A (தரைத்தளம்) | 963 | 567 |
| | | ப்ளாட் D (2வது தளம்) | 1042 | 614 |
| பிளாக் 5 | 5 | ப்ளாட் A (தரைத்தளம்) | 963 | 567 |
| பிளாக் 6 | 6 | ப்ளாட் C (1வது தளம்) | 1033 | 609 |
| பிளாக் 8 | 8 | ப்ளாட் A (தரைத்தளம்) | 963 | 567 |
| | | ப்ளாட் B (1வது தளம்) | 1035 | 610 |
| | | ப்ளாட் C (1வது தளம்) | 1033 | 609 |
| | | ப்ளாட் D (2வது தளம்) | 1042 | 614 |
| பிளாக் 9 | 9 | ப்ளாட் A (தரைத்தளம்) | 963 | 567 |
| | | ப்ளாட் B (1வது தளம்) | 1035 | 610 |
| டியூப்ளெக்ஸ் வரிசை வீடு | 10 & 11 | வீடு B (தனியான) | 1605 | 1008 |
| | | வீடு C (தனியான) | 1724 | 1083 |

**ரிசர்வ் விலை ₹ 1,76,70,000/- EMD ₹ 17,67,000/- ஏல உயர்வுத்தொகை ₹ 2,00,000/-**

**இ-ஏலம் நடைபெறும் தேதி & நேரம்: 20.02.2025, மதியம் 12.00 மணி முதல் 03.00 மணி வரை https://baanknet.com-** ல் விற்பனை முடியும் வரைதலா 10 நிமிடங்கள் கொண்ட நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்.

விலைக்குறிப்பீடு படிவத்தினை EMD உடன் ஆன்லைனில் சமர்ப்பிக்க தேதி : **05.02.2025** முதல்

விலைக்குறிப்பீடு படிவத்தினை EMD உடன் ஆன்லைனில் சமர்ப்பிக்க கடைசி தேதி : **20.02.2025** காலை 11.00 மணி வரை

**சொத்துக்களை பார்வையிடும் தேதி & நேரம்: As per request**

**தொடர்புக்கு: Mr.Abhay Kardam - Mob: 87553 64735**

*** சட்டப்பூர்வ நிலுவைத்தொகையை விட வங்கியின் நிலுவைத்தொகைகளுக்கு முன்னுரிமை உண்டு.**
****மேலே குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச கேட்பு விலையில் பொருந்தக்கூடிய TDS சேர்க்கப்படவில்லை.**
விலைக்குறிப்பீட்டாளர் / சொத்தை வாங்குபவர் குறைந்தபட்ச கேட்பு விலை அதனுடன் ஏல உயர்வுத்தொகைக்கான 1.00% வருமான வரி / TDS-ஐ செலுத்த வேண்டும். ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் ஏலத்தில் பங்கேற்பதற்கு முன் கடன்தாரர் நிறுவனத்தின் மின்கட்டண பாக்கி, சொத்து வரி பாக்கி, இதர சட்டப்படியான நிலுவைகள் முதலானவற்றைக் குறித்து தாங்களே விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும். இதற்கு வங்கி எந்த வகையிலும் பொறுப்பேற்காது.

வருமான வரிச்சட்டம் 1961, பிரிவு 194 1A-க்கு இணங்க, விற்பனை விலையில் வருமான வரி, குறைந்தபட்ச கேட்பு விலையில் பொருந்தும் வட்டி சதவிகிதம் பிடித்தம் செய்து சொத்தினை வாங்கியவரின் PAN அட்டையின் படி செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்டுள்ள சொத்துக்கு விலைக்குறிப்பீடு செய்துள்ளவர் அந்த சொத்துக்களின் மொத்த விற்பனை தொகையில் அதாவது பன்மடங்கு விலைக்குறிப்பீடு தொகை உட்பட வருமானவரி @ விற்பனை விலையில் பொருந்தும் வட்டி சதவிகிதத்தில் செலுத்த வேண்டும். எனவே வங்கி எவ்வித்திலும் அதற்கு பொறுப்பாகாது. விற்பனைத் தொகை மட்டுமின்றி பிரிவு 194 1A-ன்கீழ் TDS தொகையை அதாவது வருமான வரிச் சட்டம் பிரிவு 194 O-ன்கீழ் பொருந்துகின்ற TDS தொகையை சொத்தினை வாங்கியவரே செலுத்த வேண்டும். வருமான வரிச்சட்டம் 1991 பிரிவு 194 (O)-ன்படி சரக்குகள் விற்பனை தொடர்பாக அல்லது சேவை வழங்கும் நிறுவனத்தின் சேவை தொடர்பாக அதன் டிஜிட்டல் அல்லது மின்னணு வசதி மூலமாக அல்லது இணையதளம் மூலமாக பொருந்துகின்ற விதத்தில் e-காமர்ஸ் பங்கேற்பாளருக்கு அல்லது சேவை வழங்குநருக்கு சொத்தினை வாங்குபவரே TDS செலுத்த வேண்டியது.

ஏல விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு பாதுக்காக்கப்பட்ட கடனளித்த வங்கியின் இணையதளத்தில் பார்வையிடலாம்: **1. https://baanknet.com, 2. www.iob.in**

தேதி : 01.02.2025; இடம் : சென்னை — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோர்களுக்கு சம்பந்தப்பட்ட கடனிற்கான மேற்குறித்த தேதியில் நடைபெறும் இ-ஏலம் குறித்த 2002 பிணைய நலன் (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) மற்றும் விதி 9(1)-ன் கீழான அறிவிப்பும் இதுவேயாகும்.

**OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.**
**ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிட்.**
CIN No U67100TZ2014PTC020363
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் ஸ்கொயர், 47வது தளம், N.C. கேல்கர் மார்க், R.G. கட்காரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.
மின்னஞ்சல்: rajesh.jumani@omkaraarc.com,
அதிகாரப்பூர்வ அலுவலர் - மொபைல் எண். +91 9344684194 / 98840 62068 / 99623 33307

[பிற்சேர்க்கை - IV-A]
[விதி 8 (6) உ/ப 9(1) விதியைப் பார்க்கவும்]
அசையா சொத்தின் மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

[illegible]

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் பெயர்: திருமதி.M.ரேவதி & திரு.T.முருகேசன்

[illegible]

| | |
|---|---|
| சொத்தின் உரிமையாளர் | திருமதி.M.ரேவதி |
| கோரிக்கை அறிவிப்பு தேதி | 03.10.2018 |
| கையக சுவாதீன தேதி | 20.09.2019 |
| நிர்ணய விலை | ரூ.1,50,00,000/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது லட்சம் மட்டும்) |
| முன்வைப்புத்தொகை | ரூ.15,00,000/- (ரூபாய் பதினைந்து லட்சம் மட்டும்) |
| ஏல உயர்த்தும் தொகை | Rs.50,000/- |
| சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் | மேற்குறிப்பிட்ட எண்ணில் அதிகாரப்பூர்வ அலுவலரின் முன் அனுமதியின் பேரில் |
| 31.01.2025 தேதியிட்டது நிலுவைத் தொகை | [illegible] |
| கணக்கு விவரங்கள் | கணக்கு எண்: 344905001015, பயனாளர் பெயர்: ஓம்காரா PS 33/ 2020-21 டிரஸ்ட், வங்கி பெயர்: ICICI வங்கி, கிளை: BKC மும்பை, IFSC குறியீடு: ICIC0003449 |
| மின்-ஏல தேதி & நேரம் | 20 பிப்ரவரி 2025 காலை 11.00 முதல் நண்பகல் 12.00 -மணிக்குள் |
| [illegible] | 18 பிப்ரவரி 2025 மாலை 4:00 மணிக்கு முன்னதாக |

[illegible]

(ராஜேஷ் B. ஜுமானி)
மொபைல் எண். 9884062068
அதிகாரப்பூர்வ அலுவலர்,
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிட்.
(ஓம்காரா PS 33/2020-21 டிரஸ்ட்-ன் டிரஸ்டி ஆக செயல்படுகிறது)

தேதி: 02.02.2025
இடம்: சென்னை